

தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (19.02.2025) 2025–26 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை குறித்த கலந்தாய்வுக் கூட்டம் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில், வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், சுற்றுலாத் துறைஅமைச்சர் ஆர். ராஜேந்திரன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

### நிதி விவகாரத்தில் பா.ஜ.க.வை காப்பாற்றுகிறார் எடப்பாடி பழனிசாமி!

# பாலியல் புகாரில் விரைந்து நடவடிக்கை: உயர்நீதிமன்றம் பாராட்டு!

## அமைச்சர் எஸ்.ரகுபதி சமூக வலைதளப் பதிவு!

சென்னை, பிப். 21-

பாலியல் புகார் வந்ததும் விரைந்து நடவடிக்கை எடுக்கிறது காவல்துறை; என்றும், நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கை அதிகரித்துள்ளதாக பாராட்டிய உயர்நீதிமன்றம் என்றும் நிதி விவகாரத்தில் தமிழ்நாடே கொந்தளிப்பில் இருப்பதை மடைமாற்றி பா.ஜ.க.வை காப்பாற்றுகிறார் எடப்பாடி பழனிசாமி என்றும் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி சமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



அவரது வலைதளப் பதிவு வருமாறு :-

பாலியல் புகார்களை வைத்து அரசின் மீது அவதூறு பரப்புவதே பழனிசாமிக்கு தொடர் கதையாகி விட்டது. புகார் வந்ததும் விரைவாக விசாரித்து கைது நடவடிக்கை எடுக்கிறது காவல் துறை. ஆனால், பாதுகாப்பில்லை என சொல்லி பெண் குழந்தைகளை அச்சுறுத்துவதே பழனிசாமிக்கு வழக்கமாகிவிட்டது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு பள்ளியில் மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக புகார் எழுந்ததும் உதவி தலைமை ஆசிரியர் கைது செய்யப்பட்டு, சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார். நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், திமுக அரசை கண்டிக்கலாம். ஆனால், நடவடிக்கை எடுத்த பிறகும் பழனிசாமி அரசை விமர்சிப்பது தன்னை முன் நிறுத்தி கொள்ளும் அரசியலுக்குதானே?

பாதிக்கப்பட்ட மாணவிகள் அளித்த புகாரைத் தொடர்ந்து மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்பு குழுமத்தினர், சமூக நலத்துறை அதிகாரிகள் மற்றும் காவல் துறையினர் பள்ளிக்கு சென்று தனித்தனியாக விசாரணை நடத்தி புகாரை உறுதி செய்தனர். அதன் பிறகு உதவி தலைமை ஆசிரியர் மீது வழக்கு பதிவு செய்து காவல் துறை கைது நடவடிக்கை எடுத்துள்ளனர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிக்கு வந்ததில் இருந்து குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்ற நம்பிக்கை மாணவிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் வந்துள்ளது. அதனால்தான் மாணவிகள் துணிந்து புகார் அளிக்கிறார்கள்.

மும்மொழிக்கொள்கையை பாஜக புகுத்த முயற்சிக்கிறது; தமிழ்நாட்டிற்கு உரிய வரிப்பகிர்வு தருவதில்லை; ஒன்றிய பட்ஜெட்டிலும் தமிழக திட்டங்கள் இல்லை; கல்விக்கு நிதி இல்லை; இப்போது பேரிடர் நிவாரணமும் இல்லை என தொடர்ந்து மோடி அரசு தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது. இதையெல்லாம் மடைமாற்றி தன்னுடைய பாஜகவின் ராஜ விஸ்வாசத்தை காட்டுகிறார் பழனிசாமி. ஒன்றிய அரசுக்கு அவப்பெயர் வராமால் இருக்க பாலியல் வன்கொடுமை என்று சொல்லி மடைமாற்றும் அரசியல் யுக்தியை செய்கிறார் பழனிசாமி. ஒருசில குற்றச் சம்பவம் நடப்பதை வைத்து ஒட்டுமொத்தமாக பள்ளிக்கூடங்கள் பாதுகாப்பில்லை என மாணவிகளையும் பெற்றோரையும் பழனிசாமி அச்சுறுத்துவது கேவலமான மன நிலையை காட்டுகிறது.

அண்ணா பல்கலைக் கழக பாலியல் வழக்கு மற்றும் காவல் அதிகாரி மீதான பாலியல் வழக்கில் தமிழக அரசின் செயல்பாட்டை சென்னை உயர் நீதிமன்றம் நீதிபதிகள் கடந்த 17ம் தேதி பாராட்டினர். அத்துடன், மேலதிகாரிகள் மீது பாலியல் புகார் கொடுத்தால் நியாயம் கிடைக்கிறது என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகவும் நீதிபதிகள் தெரிவித்திருக்கிறார்கள். நீதிமன்றத்திற்கு தெரிந்து உண்மை கூட எதிர்க் கட்சித் தலைவருக்கு தெரியவில்லை.

பாலியல் வன்கொடுமை என்பது ஒரு சமூகப் பிரச்சினை. மிருகங்கள் மனிதர் போர்வையில் உலவுவதால் அவை கண்களுக்கு எளிதாக தெரியாது. அந்த மிருகம் குற்றம் செய்ததாக புகார் வந்ததும் உடனடியாக அரசும் காவல்துறையும் நடவடிக்கை எடுக்கிறது. பாலியல் குற்றவாளிகளை கைது செய்து தண்டனை பெற்றுத் தருகிறது திமுக அரசு என்பதை மறைத்து, அவதூறு அரசியல் செய்யும் அதிமுகவுக்கு தமிழ்நாட்டு மக்கள் படுதோல்வியையே தருவார்கள்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

---

### மாநிலங்கள் கப்பம் கட்டும் சிற்றரசும் அல்ல; ஒன்றிய அரசு ஏகாதிபத்திய சக்கரவர்த்தியும் அல்ல!

# மோடி அரசின் பழிவாங்கும் நடவடிக்கையை முறியடிப்போம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, பிப்.21-

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் கடந்த நான்கு ஆண்டுகளாக மிகச் சிறப்புடன் நடந்துவரும் 'திராவிட மாடல்' ஆட்சியின் மாட்சி, உலகின் பல நாடுகளின் பாராட்டையும், நன்மதிப்பையும், நம்பிக்கையையும் பெற்று நாளும் உயர்ந்தோங்கி வளர்ந்து வருகின்றது!

அதற்கான சான்றாவணம் போல் இரண்டு முக்கிய தகவல்களை நாம் சுட்டிக்காட்ட முடியும்.

'திராவிட மாடல்' அரசின் காலை உணவுத் திட்டம் - பள்ளி மாணவக் குழந்தைகளுக்கு - (இது தி.மு.க.வின் தேர்தல் அறிக்கை - வாக்குறுதிகளில் கூறப்படாதது என்றாலும், கூடுதலான சிறப்பான செயலாகும்).

இதன்மூலம் பிள்ளைகளின் பள்ளி வருகை, வகுப்பில் பசி, மயக்கம் அடையாமல் ஈர்ப்புடன் வகுப்புப் பாடங்கள் கற்றல் வாய்ப்பாகி, கல்வி வளர்ச்சியின் வரலாற்றில் புதிய மைல் கல்லாகி சாதனை புரிந்துள்ளது.

அமைதிப் பூங்காவாக திகழ்கின்ற காரணத்தால், வெளிநாட்டு முதலீடுகள், தொழிற்சாலைகளை தமிழ்நாட்டில் நிறுவிட பெரும் நிறுவனங்கள், வடநாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் இங்கே வந்து தொழிற்சாலைகளை அமைப்பதினால், பல லட்சம் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு - படித்து வேலை தேடும் இளைஞர்கள் - பலருக்கும் பாலின வேறுபாடின்றி - வேலை வாய்ப்புகள் அதிகரித்து - தமிழ்நாட்டின் வருமானம் பெருகும் நிலை ஏற்பட்டுள்ளது.



**மலிவான அரசியல்!**

இதைக் கண்டு மகிழ்ந்து, வரவேற்று ஊக்கப்படுத்த வேண்டிய ஒன்றிய அரசு - அதில் உள்ள ஆளுங்கட்சியான பா.ஜ.க. (இயக்குவது ஆர்.எஸ்.எஸ்.) எரிச்சலோடு, நிதிப் பங்கீட்டினை நியாயமாக தராது, மழை, வெள்ளம், புயல் போன்ற பேரிடர் (Disaster) கால உதவிகளைக்கூட சரியாக - போதிய நிதி வழங்காமல் வஞ்சித்து வருகின்ற கொடுமை. சிறிதும் கூச்சநாச்சமின்றி - அரசமைப்புச் சட்ட கூட்டாட்சி நிதிப் பகிர்வு சட்டங்கள் - நியாயங்களையே பின்பற்றாமல் புறந்தள்ளி, நிதியைத் தராமல், மாநில அரசின் பொருளாதாரக் கழுத்தை நெரித்துக் கொண்டிருப்பது மகத்தான அரசியல் பிழையாகும்.

"அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்றாகும்" என்பதை உணராமல், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில ஆட்சி தங்களது கொள்கையையொட்டி திறமையோடு சாதனைகளைச் செய்கிறதே என்ற மன நோக்காட்டினையே கொண்டு இப்படி நிதி தராமல் - தாமதித்து - ஏதோ பிச்சையிடுவது போல நடத்துவது, ஜனநாயகத்தையும், பிரமாணம் எடுத்துக் கொண்ட அரசமைப்புச் சட்ட நெறிகளையும், தத்துவங்களையும் கொச்சைப்படுத்தும் மலிவான அரசியல் கீழிறக்கமாகும்.

இதோ பட்டியல்: ஆந்திரா, ஒடிசா உள்ளிட்ட 5 மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு ரூ.1,554 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. ஆந்திரா ரூ.608 கோடி. நாகாலாந்து - ரூ.171 கோடி. ஒடிசா - ரூ.255 கோடி. தெலங்கானா - ரூ.232 கோடி. திரிபுரா ரூ.289 கோடி.

**இது முதல் முறையல்ல!**

தமிழ்நாடு மழை, வெள்ளம், புயலால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட மாநிலம் என்றாலும், 'ரொட்டி வரும்' என்று எதிர்பார்த்திருந்த பட்டினியாளர்களுக்கு கற்களைத் தரும் கொடுமை போல நிகழ்ந்துள்ளது!

**பி.வில்சன் எம்.பி.யின் வரவேற்கத்தக்க முயற்சி!**

தி.மு.க.வின் மாநிலங்களவை உறுப்பினரும், மூத்த வழக்குரைஞரும், சட்ட வல்லுநருமான பி.வில்சன் எம்.பி. ஒரு தனி நபர் மசோதாவை, இந்தப் பேரிடர் நிதி வழங்கும் சட்டத் திருத்தமாக முன்பே ஒன்றை அளித்துள்ளார். அதை ஒன்றிய அரசு ஒதுக்கியே வைத்துள்ளது ஏனோ?

"The Disaster Management Act 2025" என்பதைத் திருத்திடவேண்டும் என்பதே அதன் நோக்கம்.

பிரதமரும், பிரதமரால் நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர்களே இந்த தேசிய பேரிடர் நிவாரண நிதிக் குழு உறுப்பினர்களாக இருந்து, பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதை மாற்றி, பாதிக்கப்பட்ட மாநிலங்களைச் சேர்ந்தவர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து, ஒரு பொதுமையை உருவாக்கி, 30 நாள்களுக்குள் உரிய நிதி அளிப்பது போன்ற பல கருத்தினை உள்ளடக்கிய அத் தனிநபர் மசோதா, அதனை, பொதுவாக ஒருவகை அமைத்தலை வற்புறுத்தியுள்ளது - வரவேற்கத்தக்க முயற்சி!

இந்த நிதி அளிப்பை ஓர் "அரசியல் தூண்டிலாக்கி", விருப்பு - வெறுப்புகளின் வெளிப்பாடுகளாக்கி, நிதி நிர்வாகத்தின் நேர்மையை குலைக்கலாமா? கூட்டாட்சியின் இலட்சணமா? இது மக்களின் வரிப் பணம் - வருவாய்மூலம் வருவது!

யாருடைய தனிப்பட்ட நன்கொடைமூலமும் அல்ல என்பதை உணர்ந்திட வேண்டும்.

இதனை பல கட்சிகளும், ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள அமைப்புகளும் வலியுறுத்தவேண்டும்.

இதுபற்றிய விரிவான விளக்கங்களையும், பரப்புரைகளையும் கற்றவர்களும், மற்றவர்களும் எடுத்துரைக்கவேண்டும்.

இது ஓர் ஆளுங்கட்சிப் பிரச்சினை என்று அலட்சியமாய் எண்ணுவது நாட்டு நலனை அலட்சியப்படுத்துவதாகும்!

உரிமைகளைக்கூட சலுகைகளாகப்பார்ப்பதா? மாநிலங்களை, ஒன்றிய அரசு ஏதோ கப்பம் கட்டும் பழைய கால சிற்றரசுகளாகவும், தர்பார் நடத்தும் ஏகாதிபத்திய சக்ரவர்த்திகளாகவும் - டில்லி எஜமானர்கள் நினைத்துக் கொண்டு செயல்படுவது - அரசமைப்புச் சட்டத்திற்கு நேர் முரணாகும்.

மக்களாகிய நமக்கு நாமே தந்த இந்த அரசமைப்புச் சட்டம் முழு இறையாண்மையை (மக்கள்) உடைய ஜனநாயக குடியரசு Sovereign, Socialist, Secular Democratic Republic என்ற முகப்புரையை அவர்களுக்கு நினைவூட்டுவது மக்கள் கடமையாகும்.

மக்கள் சிந்திக்கட்டும்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

## 21 ஆம் ஆண்டு நினைவு நாள்



திருமதி

**தமிழரசி ஜெயராமன்**

நினைவு நாள் : 21.02.2025

**எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே**
**எங்களது இதயத்தில் நிலைத்து நிற்கும்**
**உன்னை எண்ணி எங்களது கண்ணீர் அஞ்சலியை**
**காணிக்கையாக்குகிறோம்.**

★★★

**தந்தை** - நினைவில் வாழும் **கோ.சி.மணி** முன்னாள் அமைச்சர்
**தாய்** - நினைவில் வாழும் **கோ.சி.கிருஷ்ணவேணி மணி**
**கணவர் - தி.ஜெயராமன்**
**மகன் :** டாக்டர் **ஜெ.குமணன்** M.D.,D.M (Oncology)
**மருமகள் :** டாக்டர் **கே.கண்மணி**
**பேரன் : நிலன் குமணன்** **பேத்தி : நிலா தமிழரசி**
மற்றும் குடும்பத்தினர் – ஆடுதுறை – தஞ்சை மாவட்டம்

---

## 'வாட்ஸ் அப்'பில் வலம் வருவது!




---

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; ஒன்றிய பா.ஜ.க. அரசு, இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையரை நள்ளிரவில் நியமனம் செய்திருக்கிறதே?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; இந்திய நாடு நள்ளிரவில் சுதந்திரம் பெற்றது என்பதால், தேர்தல் ஆணையரையும் நள்ளிரவில் நியமிப்பது பொருத்தம் என்று நினைத்திருப்பார்களோ!**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**நெல்லை மஸ்தான்**
**பிப்ரவரி 21 (1984)**



**தொடக்க காலம் முதலே அய்யா – அண்ணா – தலைவர் கலைஞர் வழியில் தமிழர் நலம் நாடி உழைத்த தோழர் மஸ்தான் காட்சிக்கு எளியவர்; கழகமே உயிர் மூச்சென வாழ்ந்தவர். கழகப் பணிகளில் படிப்படியாக முன்னேறியவர்.**

**நெல்லை நகரச் செயலாளர், நெல்லை மாவட்ட துணைச் செயலாளர் என பல பொறுப்புகளை வகித்து இறுதியில் நெல்லை மாவட்டக் கழகச் செயலாளராக பணியாற்றினார்.**

**கழகப் பணியாற்றும்போதே தொழிற் சங்கப் பணிகளிலும் தீவிரம் காட்டியவர். தொ.மு.ச. பேரவைச் செயலாளராகவும் செயல்பட்டவர்.**

**"நெல்லைச் சீமையில் கழகத்திற்குக் கிடைத்த வைரமணி விளக்கு என் அன்புத் தம்பி மஸ்தான்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**